ஹிஜ்ரி 1342-ம் ௵ முஹர்ரம் ௴

இஸ்லாமதவிளக்கம்

4.

"ஹிதாயத்துல் இதவான் சங்கம்"
மூலமாய் வெளியிடப்பட்டது
மரைக்காயர் பள்ளிவாசல் தெரு,
தென்காசி.

மீ. இ. முகம்மது அப்துல்காதிர் சாஹிபு.
பிரஸிடெண்டு.

மீருனியா பிரிண்டிங் பிரஸ்,
திருநெல்வேலி.

1923.

இலாஹி.

முஹர்ரம்.

முஸ்லிம்களிடத்தில் இம்மாதத்திலிருந்து வருஷம் ஆரம்பமாகிறது. நாயகம் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருமக்காவிலிருந்து திருமதிஞவுக்குப் பிரயாணமாய் வந்ததிலிருந்து இவ்வருஷம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதத்தில் செய்ய வேண்டிய கருமங்களையும், நன்மைகளையும் நாயகம் விரிவாய் அருள்புரிந்திருக்கிருர்கள். (ஹதீது) ஆஷூரர்வில் நோன்பு வைப்பதினுல் ஒரு வருஷத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (முஸ்லிம்) (ரஹ்) நாயகமவர்கள் தாங்களும் நோன்பு வைத்து மற்றோர்களையும் வைக்கும்படி உத்திரவு செய்திருக்கிருர்கள். ஆஷூராவுடைய நாளையில் இரண்டு நோன்பு அதாவது 9-ம், 10-ம் அல்லது 10-ம், 11-ம் ஆக சேர்த்து வைப்பது சுன்னத்து. இன்னும் அந்நாளில் அன்னதானஞ் செய்கிறதும், நபில் தொழுகை, திக்று முதலிய வணக்கம் செய்கிறதும் மிகுந்த பிரயோஜனம் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. சிலர் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் அந்நாளையில் ஷஹீதாயிருக்கிருர்கள். அதனுல் அந்நாளைக்கு இவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிறதென நினைக்கிருர்கள். இது தவறு.

ஹஸ்ரத் இமாமவர்கள் ஷஹீதாக முன்னமே அந்நாளின் பெருமையைப்பற்றி நாயகம் அருளிச்செய்திருக்கிருர்கள். ஆகவே இந்நாட்களில் நோன்பு வைத்து மற்றும் நன்மைகளும் செய்து புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ள இருலோக சர்தாராகிய நபிகள் பெருமானுர் உத்தரவு செய்திருக்க நமது முஸ்லிம்களில் பலர் அந்நாளில் செய்யும் பாவத்துக்கும் பிதுஅத்தென்ற நூதன அநுஷ்டானங்களுக்கும் ஓரளவு கிடையாது. வருஷமெல்லாம் நடக்காத பிதுஅத்துகளும், பாவங்களும் அந்நாளிலேயே நடைபெறுகின்றன. தௌஹீதென்ற சுத்த சத்திய மார்க்கத்தை அநுசரித்த முஸ்லிம்களாகிய யாம் இணைவைக்கிற சிருஷ்டிவணக்கத்தாரை குறைகூறியதுபோக அவர்கள் முஸ்லிம்களைக் குறைகூறும்படி நேரிட்டுவிட்டது மிகப்பரிதாபமே.

எங்களுக்கு பூரண சொரூபத்தைக் கடவுள் காட்டிவிட்டு உங்களுக்கு ஐந்து விரலுள்ள கரத்தை மட்டும் காட்டினுர். ஆதலால் நீங்கள் ரூபத்தை வணங்குகிறீர்களென்று கூறும்[illegible] காலம் நேரிட்டதைப்பற்றி நாம் [illegible]வளவு தூரம் வருந்[illegible]

மிகச் சொற்பமேயாகும். இவ்வாறான வீணுசாரங்களை முஸ்லிம்கள் நிவர்த்திக்காமல் நடத்திவருவார்களேல் இதற்குப் பின்னுள்ள சந்ததிகள் இதை என்னவிதமாய் ரூபகாரப்படுத்தி அப்பால் என்ன விதமாகக் கீழ் நோக்கிப் போய்விடுவார்களென்பது குறிப்பிடத் தக்கது. மாலிகானு முஸ்லிம்களின் நிலைமை நமது கண் முன் நின்று வாட்டிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு வீணுசாரங்கள் நமது உம்மத்துகளிடத்தில் நடைபெறக்கூடுமென்றே நாயகமவர்கள் தங்களின் ஒவ்வொரு உபந்தியாசங்களிலும் எனது நடப்பைப் பின்பற்றாதவன் என்னைவிட்டும் தூரப்பட்டவன் எனது மன்றாட்டமும் அவனுக்குக் கிடையாதென்று வற்புறுத்தி வற்புறுத்திக்கூறி வந்திருக்கிறார்கள். நாயகம் அவர்கள் இவ்விதம் கூறியிருந்தும் நாம் அதை சட்டைபண்ணாமலிருந்தால் நாளை மறுமையில் நாயகமவர்களின் சமூகத்தில் நமது கதி என்னவாகும்? என்பதை உணர்ந்து இச்சடங்குகளை விட்டும் நீங்கிவர ஆண்டவனருள்புரிவானாக.

சிநேகிதர்களே! இம்மை மறுமை இரண்டிலும் பிரயோஜனமற்ற இக்காரியத்தில் கணக்கற்ற பொருள்களைச் செலவு செய்து பாவத்திற்காளாகிறதைவிட மத சம்பந்தமான காரியங்களில் செலவு செய்து புண்ணியத்தைச் சம்பாதிப்பதே புத்திசாலிகளுக்கழகாகும்.

இந்து முஸ்லிம் ஒற்றுமையும், குர்பானியும். (3)

உயிரைக் காப்பாற்றுதற்காக தர்மம் அதர்மத்தை அறிகிறவர்கள் போஜனத்தி (பசி) னால் வருந்தி பாமதேவரிஷியானவர் நாயின் மாமிசத்தைத் தின்ன விரும்பினார். இன்னும் அவருக்கு யாதொரு தோஷமும் அணுகவில்லை. (மனு 10. அ. 166 ம.) (106.)

பசியினால் வருந்தி தர்மம் அதர்மத்தையறிகிற விஸ்வாமித்திர ரிஷி மிலேச்சன் (தாழ்ந்த ஜாதியின்) கையிலிருந்து நாயின் இறைச்சியை வாங்கி புசிக்கத் தயாரானார். (மனு அ. 10-ம் 108.)

(லக்நவ் அச்சாபீஸ் நவில் கிஷ்வர் முன்ஷியின் உத்தரவுப்படி மஹர் சந்துபண்டிதர் 1895—ம் வருஷ மொழி பெயர்த்த தர்ம [illegible]ம்) நாயின் தொடை (மாமிசத்தை) திருடிப் புசிக்கிறதற் [illegible] காலத்தில் விஸ்வாமி[illegible]திரரிஷி மிலேச்சனுடைய வீட் [illegible]னர். (மகாபாரதம் [illegible]ந்திபருவம் அ. 141.) இன்னும்

மனுஸ்மிருதி அ. 3. சு. 268-லிருந்து 272 வரை மாமிசம் புசிக்கிறவிஷயம் அளவு மீறி கிடைக்கிறது. இன்னும் அ. 5. சு. 7, 11, 20, 22, 23, 24, 27-லிருந்து 44-வரை தின்ன ஆகும் ஆகாதென்ற உயிரினங்களை விளக்கப்பட்டிருக்கிறது.

புராணம்:—ஸ்ரீராமச்சந்திரர் சதாவும்வேட்டையாடிக்கொண்டிருந்தார். பெரும்பாலும் மான் வேட்டையாடுவார் அவரின் ஆயுதம் அம்பும் வில்லுமாயிருந்தது. (ஆரிய முசாபிர்) (முபாஹிஸா கோஷ்துரி 116 ப.) அப்போது அவ்விரு சகோதாரும் (இராமரும், லக்ஷ்மணரும்) பட்சியை அடித்துக்கொண்டு வந்தார்கள். மாலையில் அதன் இறைச்சியைப் புசித்து ஒரு விருக்ஷத்தின் கீழ் தங்கியிருக்கச் சென்றுவிட்டார்கள். (ராமாயணம் அயோத்தியாகாண்டம் சருக்கம் 52, சு. 102.)

அநுமார் (குரங்கு) ராமச்சந்திரரிடத்தில் மீனை (ஜலபுஷ்பத்தை) ப்புசிக்கும்படி சொல்லுகிறது. (ராமாயணம் ஆர்த்த காண்டம். அ. 73. சு. 14, 15.)

ஒரு கோஸ் (சுமார் 2-மைல்) தூரம் சென்று இரு உடன் பிறந்தாரும் (இராமர், லக்ஷ்மணர்) ஒரு மானைக் கொன்றார்கள். பின்பு ஜம்னுவின் அருகே சென்றுவிட்டார்கள். (ராமாயணம் அயோத்தியாகாண்டம். சருக்கம். 55. சு. 32, 33.)

ராமச்சந்திரர் லக்ஷ்மணரை நோக்கி விரைவாக ஒரு மானை வதைத்துக் கொண்டுவா. ஏனெனில் சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி நாம் செய்யவேண்டும் என்றார். லக்ஷ்மணர் இவ்வுத்தாவைப்பெற்று மானை வதைத்துக்கொண்டுவந்தார். அதைக் கொண்டு ஹோமம் செய்து புசித்தார்கள். (ராமாயணம் அயோத்தியாகாண்டம் சரு. 56. சு. 24, 26-வரை.)

ஐந்துவிரலுள்ள ஐந்து பிரிவான உயிரினங்கள் பிராமணன் சாப்பிடத்தகுந்ததாயிருக்கின்றன. (ராமாயணம் கஷ்கந்தாகாண்டம் ச. 17. சு. 39.)

பசுவின் மாமிசம் கொடுக்கிறதினால் பதினொரு மாதம் வரை பிதுர்க்கள் திருப்தியாயிருக்கிறார்கள். (பங்கு பாஸீ அச்சாபீஸில் சனாதன தர்மத்தின் பிரபல பண்டிதராகிய ஸ்ரீ அருநவ்மீத ராயேஜி என்பவரின் முயற்சியால் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட விஷ்ணு புராணம் அத்தி. 16. அனுஷ் 3. ப. 313, 314.)

பசுவின் இறைச்சியை சிரார்த்யத்தில் அருந்தச்செய்கிறதினால்

ஒன்பது மாதம் வரை பிதுர்க்கள் திருப்தியாயிருக்கிறார்கள். (விஷ்ணு சந்தாவை மொழி பெயர்த்த ஜோல்சன் ஜேலி அ. 80. ப. 169)

வந்திருக்கப்பட்ட பிராமணன், க்ஷத்திரியன், ராஜா, அத்தீ (ஒரு அர்த்தத்தில் சன்னியாசி என்று வருகிறது,) வுக்காக கொழுத்த காளையும் இன்னும் பெரிய ஆடும் (அறுத்து) சமைக்க வேண்டும் என்று சுருதிகளில் எழுதப்பட்டிருக்கிறது. (1907-ம் வருஷம் அடாவாவில் பீம்சீன் என்ற பண்டிதரால் அச்சுப்பதிப்பித்த வசிஷ்ட சமர்தி 120, 121. ப.)

அந்தப் புருஷன் வாலிபமான கொழுத்த காளை அதைவிடச் சிறிது வயது கூடின காளையின் இறைச்சியை அரிசியோடு சேர்த்துச்சமைத்து அதில் நெய்யும்விட்டு தனது பத்தினியோடு புசிக்க வேண்டும். (பாஹ்தார் நேகஉபநிஷது அத்தி. 8. பாரஹிமன் 4. ம. 18.) (இதற்குத்தான் பிரியானி என்று சொல்லப்படும்.)

கௌசிகரின் புத்திரர் குருக்குருசியின் சீஷர்கள் பசுவின் மாமிசத்தை சிரார்த்தத்தில் புசித்தார்கள். (சிவபுராணம் தர்ம சந்தா அ. 63.)

மார்க்கண்டேய புராணம் அத்தி 32-ல் மாமிசம் புசித்தல் பிதுர்க்களின் திருப்தி என்று எழுதப்பட்டிருக்கிறது.

ராஜா ஜதேஷ்டர் பஷிம்ஜீ என்பவரை நோக்கி உலகத்தில் மாமிசத்தின் ருசியைப்போல் வேறொருவஸ்துவுமில்லை. மாமிசத்தினால் தேக பலம் வளர்கிறது. இரத்தம் உற்பத்தியாகிறது. மாமிசத்தைவிட நேர்த்தியான வேறொரு ஆகாரமில்லையென மொழிந்தார். (மகாபாரதம் சாந்திபருவம் அ. 18. ப. 1543.)

மச்சபுராணத்திலெழுதியிருப்பதாவது கௌசிக முனியின் ஏழு குமாரர்களும் ஒரு மனிதனின் பசுவைக்கொன்று தின்றுவிட்டதினால் மோக்ஷமடைந்தனர். (துஹ்பத்துல் ஹிந்து 195 ப.)(1863—ம்வரு அச்சடிக்கப்பட்ட சித்தமத நிருபன் 334 ப.)

முஸ்லிம்களிடத்திலும் ஏழு மனிதர்களுக்காக ஒரு மாடு குர்பானி செய்யப்படுகிறது.

வாயிஷம்பாயின் என்ற ரிஷி ஜன்மீஜா என்ற அரசனைப் பார்த்து முற்காலத்தில் அட சரா அல்லது விஷ்ணுவென்று ஒரு இராஜனிருந்தான். அவன் தானம் தருமகாரியம்செய்துகொண்டு வந்தான். அவன் உயிரினங்களை வேட்டையாடினான் என்று

சொன்னார். (மகாபாரதம், ஆதிபருவம்.)

ஒரு செம்படவன் மீன் வேட்டையாடினதில் ஒரு மீன் அவன் கையிலகப்பட அதன் வயிற்றைக்கீறிப் பார்க்க ஒரு ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் இருந்ததாம். (மகாபாரதம் ஆதிபருவம்.)

வசு என்னும் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். (மகாபாரதம், ஆதிபருவம்.)

ஒரு நாள் பாண்டுராஜன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அவ்விடத்தில் மான்ரூபமெடுத்துக் காமக்கலவியிலிருந்த ஒரு பெரியவரை மெய்மானென்று எண்ணி அம்பாலெய்தான். (துஹ்பத்துல் ஹிந்து 31. ப.)

விராஞ்சனன் யென்ற அரசன் யாகத்தில் கொழுத்த மாடுகளைக்கொன்றான். (மகாபாரதம் இரண்டாம் பருவம் மூன்றும் பிரிவு.)

ஐந்து நகங்களுள்ள உயிரினங்களில் உடும்பு, ஆமை, முயல் இவைகளும், மச்சங்களிற் சிலவும் புசிக்கத் தகுந்தவைகள். (சத்தாக்ஷரம் துஹ்பத்துல் ஹிந்து ப. 203.)

கபிலமுனி சொல்வதாவது பிரம்மா மாமிசம் புசிக்கும்படி போதித்தார். (சாதாரணமான இந்து மார்க்கம் 93. ப.) (வரும்.)

காந்திமதம்.

காந்தி மதத்தைப்பற்றி பத்திரிகைகளில் பலவிதமாய் அபிப்பிராயங்கள் உலாவி வருகின்றன. சில பத்திரிகைகளில் காந்தி மதத்தையும் அவரின் சிறப்பையும்பற்றி விபரித்துக் கூறிவருவதில் இந்த தேக பலத்தைக்கொண்டு மற்ற ஜெந்துக்களை ஹிம்சை செய்து தன் தேகத்தைப் போஷிப்பதே மிருக வாழ்கையென்றும் மகாத்மா காந்தி கிறிஸ்துவை விடச் சிறந்தவரென்றும் எழுதப்பட்டு வருகிறது. இதில் மிருகத்தை ஹிம்சித்து தன் தேகத்தைவளர்த்தல் மிருக வாழ்கையென்று கூறுவது பொருத்தமாக இல்லை. ஏனெனில் எல்லா வேதங்களிலும் அவ்விஷயம் சொல்லப்பட்டிருப்பதுடன் ஹிந்து வேத ரிஷிகளும் அவ்வாறு நடத்தி வந்திருக்கிறார்கள். இன்னும் இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டுவரும் சமயத்தில் இவ்விதம் யெழுதவேண்டியது அவசியமே இல்லை.

மகாத்மா காந்தியானவர் ஒரு இந்து. அவர் தேசத்திற்கும், இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் பாடுபட்டு வருகிறதினால் பொது

ஜனங்களில் மதிக்கப்பட்டுவருகிறார். இவ்வளவுக்குள் அவரை தீர்க்கதரிசியாகிய ஹஸ்ரத் ஈசா நபி அவர்களைவிடச் சிறந்தவரென்று அபிப்பிராயப்படுவது மிக ஆச்சரியமே. உலகத்தில் புத்தி மயங்கி பிரமிக்கத்தக்க நவீன கருவிகளை எத்தனையோ மகாத்மாக்கள் உண்டுபண்ணி ஜனங்களுக்கு அனேக சௌகரியங்களையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ராஜ தந்திரத்தில் பேர்போன நிபுணர்களெல்லாம் உலகில் இருந்து வருகின்றனர். கமால் பாக்ஷாவும் ராஜ தந்திரத்தில் மிகப் பேர்போன நிபுணரென்று உலகம் ஏற்றுக்கொண்டிருக்கும்போது அவர்களை எல்லாம் தீர்க்கதரிசிகளென்றும் - தீர்க்கதரிசிகளை விடச் சிறந்தவர்களென்றும் கூறாமல் மகாத்மா காந்தியை தீர்க்கதரிசிகளைவிடச் சிறந்தவரென்று கூறுவது ஓர் புதுமையேயாகும்.

சகோதரர்களே! ஒரு மனிதன் ஓர் நற்காரியஞ்செய்தால் அதற்குத் தக்கபடிதான் அவனை மதிக்கவேண்டுமே யல்லாது கடவுளுக்குச் சமமாகவும் அல்லது தீர்க்கதரிசிகளுக்குச் சமமாகவும் மதிப்பது பெரும்பிழையாகும்.

மிர்சாஜீ.

காதியான் கிராமத்தில் மிர்சாசாஹிபென்றொருவர் மதப்பிரசாரஞ்செய்து வந்தார். காந்திஜீயைப்போலவே அவரையும் அளவு மீறி உயர்த்தி முஜத்திதென்றும், நபியென்றும் ஒப்புக்கொள்ளாதவர்கள் மதத்திற்குப் புறம்பானவர்களென்றும் ஹஸ்ரத் ஈசா நபி அவர்களைவிடச் சிறந்தவரென்றும், நாளதுவரை ஒரு கூட்டம் விசுவாசித்து முஸ்லிம்களுக்குள் பலத்த வேற்றுமையை உண்டுபண்ணி விட்டுவிட்டது. ஆகவே காந்திஜீயை முஸ்லிம்களாகிய யாம் ஒரு ராஜிய நிபுணரென்றும் ஹிந்து மதத்தைச் சார்ந்தவரென்றும் நினைந்து மதிக்கிறோம்.

கடிதம்.

ஹிதாயத்துல் இதுவான் சங்கத்தின் ஜூன், ஜூலை மாதத்தின் இஸ்லாமத விளக்கமென்னும் மாதாந்தரப் பத்திரிகை இரண்டும் யான் தற்காலம் வாசஞ்செய்யும் ஹாரிபோட்டு எஸ்டேட்டுக்குக் கிடைத்தன. உண்மையில் தூக்கத்தில் இருந்த என்னை தட்டி எழுப்பியதுபோல் அதன் மத போதனைகளும் வியாசங்களுமிருக்கின்றன.

ஜீவவதையும், ஆனந்த [illegible]ாதினியும் என்னும் வியாசத்தையும் அதற்கு ஹஸ்ரத் ஹாஜி [illegible] சாஹிபவர்கள் எழுதிய மறுப்பை

யும், போதனையையும் பார்த்தேன். உத்தமர்களுக்கது நற்றவத்
தால் கிடைத்த நல்லறிவுச் சுடரென மதித்தேன். ஒவ்வொரு
ஜில்லாக்கள் தோறும் கனம் தங்கிய உலமாக்கள் முஹம்மதிய
மதத்திலுள்ள நற்போதனைகளை அச்சமற்று கல்வி யறிவில்லாத
அல்லது இந்து சகோதரர்களின் சாவகாசத்தினுல் முஸ்லிம்கள்
பால் மலிந்து கிடக்கும் பிதுஅத்தென்னும் கெட்ட வழக்கங்
களை விட்டொளிக்கப் போதனை செய்யவேண்டிய தங்கள் கடமை
யைச் செய்யவேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். அவ்வாறு
நல்லறிவூட்ட முன்வரும் உத்தமர்களாகிய இஸ்லாம் சகோதரர்
களே! உங்களால் இயன்ற பொருளுதவி செய்து நற்பயனடை
யும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஆனந்தபோதினியையும், ஹக்கீம் சாஹிபையும் அவர்களின்
ஜீவகாருண்யத்தையும்பற்றி எனது சிற்றறிவிற் கெட்டியவாறு
சற்று எழுதத் துணிந்தேன். ஆயினும் அதைப்பற்றி பல நிபு
ணர்களால் வரையப்பட்டிருப்பதைப் பார்த்து நிறுத்திக்கொண்
டேன். ஒவ்வொருவரும் பிறமதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய
லாம். ஆக்ஷேபிக்கலாம். அதற்குச் சுதந்தரமுண்டு. எனி
னும் அருமையான வார்த்தைகளை புழங்கவேண்டும். அன்றேல்
மன வெளிச்சிக்குக்காரணமாகும்.

ஜீவவதை இறைவனுல் ஏற்படுத்தப்பட்ட விதிகளில் ஒன்
றென்றும், அது எல்லா மதங்களிலும் அநுஷ்டிக்கப்பட்டுவருகிற
தென்றும், அது நியாய விரோதமென்று பறை சாற்றுவது தவ
றென்பதும் எனது முழு நம்பிக்கை. அவ்வாறன்று ஜீவவதை
செய்வது குற்றமாகுமென்றால் வேத விதிப்படி எண்பிக்க முன்
வரவேண்டும். இன்றேல் ஒரு வகுப்பாரின் அபிப்பிராயங்களை
மற்றொரு வகுப்பார் பின்பற்றவேண்டியது அவசியமில்லை யென்
பதை உணரவேண்டும். திருக்குர்ஆன் ஷரீபின் போதனையின்
மகத்துவத்தைப் பற்றி பிற மதஸ்தர்கள் கூறுவதிலொன்றை
இங்கு தருகிறேன்.

குர்ஆனின் பாஷாஞானம் யாதும் கலப்பற்ற பரிசுத்தமான
அரபிப் பாஷையாகயிருக்கிறது. அதன் வாசக நடையானது
மனதைக் கவரத்தக்கதாகவும், அதன் செய்யுட் சொல் அலங்கா
ரம் இந்நாள் வரை ஒப்பற்றதாகவுமிருக்கிறது. அதன் நீதி கற்
பனைகள் சுத்தமானவைகள். யாராவதொருவர் அக்கட்டளையைக்
கண்டிப்பாய் அநுஷ்டித்து வருவாரேல் அவர் சந்தேகமின்றி

பரிசுத்தராவர். என்று பாபுலர் என் சைக்கிளோபீடியா 7-வது டிவிஷன் 326-ம் பக்கத்தில் கூறுகிறார்.

ஆகையால் எனது சகோதரர்கள் குர்ஆன்ஷரீபின் மகத்துவத்தையும், பிறரின் அபிப்பிராயங்களையும் உணர்ந்து சத்தியத்தைக் கைக்கொள்வார்களாக.

வே. பே. முஹியித்தீன் பாவா.

காதியான் மிர்சாசாஹிபு யார்?

காதியான்மிர்சா சாஹிபைப்பற்றி பத்திரிகைகளில் அவர் முஸ்லிமா? காபிரா? முஜத்திதா? தஜ்ஜாலா? என்று பற்பல அபிப்பிராயங்கள் உலாவி வருகின்றன. ஆயினும் யான் பிறர்களின் தீர்மானங்களை வெளியிடாமல் மிர்சா சாஹிபின் அருமையான வாக்கியங்களை இதை வாசிக்கும் நண்பர்களின் முன்னால் சமர்ப்பிக்கிறேன். உணர்ந்து உண்மையை விளங்குவார்களாக.

மிர்சாசாஹிபு சொல்லுகிறார்.

1. நான் நபிப் பட்டத்தை தாவாச்செய்யவில்லை. மேலும் இவ்வாறு தாவாச்செய்பவனை இஸ்லாமின் சுற்றுப்புறத்தை விட்டும் நீங்கினவனாகக் கருதுகிறேன். (ஆஸ்மானி பைசலா 7. ப.)

2. நான் ரசூலுமல்ல வேதத்தைக் கொண்டு வந்தவனுமல்ல. (இஸாலா அவ்ஹாம் 178. ப.)

3. திருக்குர்ஆனுனது கடைசி நபிக்குப்பின்பு வேறொரு ரசூல் வருகிறதை ஆகுமாக்கி வைக்கவில்லை. அவர் புதிய ரசூலாயிருந்தாலும் பழைய ரசூலாயிருந்தாலும் சரியே. ஏனெனில் ரசூலுக்கு மதக்கல்வி ஜிபுரியீலின் (தேவதூதர்) மூலமாகக்கிடைக்கிறது. இன்னும் தீர்க்கதரிசனம் வஹீயினுடைய உடையின்பேரில் ஜிபுரியீல் இறங்குகிற வாயலாகிறது அடைபட்டுப் போய்விட்டது. (இஸாலா அவ்ஹாம் 761. ப.)

4. ஏ! மனிதர்களே குர்ஆனுக்கு சத்துருவாகாதீர்கள். இறுதி நபிக்குப் பின்பு நபிப்பட்டத்தின் வஹியின் புதிய தொடரை நடத்தாதீர்கள். எவன் முன்னால் ஆஜராகப்படுவீர்களோ அந்த இறைவனைக்கொண்டு வெட்கியுங்கள். (ஆஸ்மானி பைசலா 38. ப.)

இதை வாசிக்கும் நண்பர்களே! இந்த நான்கு ஆதாரங்களிலும் மிர்சா சாஹிபு நபிப்பட்டத்தைத் தாவாச்செய்தவன் இஸ்லாமார்க்கத்தைவிட்டுப் புறம்பானவனென்றும் நான் ரசூலுமல்ல வேதத்தைக் கொண்டுவந்தவனுமல்ல, கடைசி நபிக்குப் பின்பு

வேறொரு நபி வருகிறது கூடாதென்றும் ஜிபுரியில் மூல்மாக வஹீ வருகிற வாயல் அடைபட்டுப் போய்விட்டதென்றும் குர்ஆனுக்குப்பின்பு நபியின் தொடரை நடத்த வேண்டாம். இறைவனைக்கொண்டு வெட்கியுங்கள். குர்ஆனுக்கு சத்துரு வாகாதீர்களென்றும் மிகத் தெளிவாய்க் கூறியிருக்கிறதை நன்கு கவனித்துக்கொண்டபின் இப்போது பாருங்கள் மிர்சா சாஹிபு கூறுகிறூர்.

1. இறைவன் பராஹீன அஹ்மதியா வென்ற நூலில் இந்த ஏழையின் நாமத்தை உம்மத்தீ (நபியைத் துயர்ந்தவன்) யென்றும் நபி யென்றும் வைத்தான் (இஸாலா 533. ப.)

2. எவன் காதியானி (கிராமத்தில்) தனது ரசூலை அனுப்பினானோ அவனே மெய்யான இறைவன். (தாபிவுல்பலா 11. ப.)

3. பரிசுத்தமான இறைவன் எனக்குச் சந்தேகமின்றி நான் ஆபத்துகளை நிவர்த்தி செய்கிற 'ரஹ்மானுயிருக்கிறேனென்றும் இன்னும் திட்டமாக என்னிடத்தில் ரசூல்மார்கள் பயப்படமாட்டார்களென்றும் வஹிபறிவித்தான். (அல்ஹக்கம் ஜில்து 5 நம்பர் 8. பக்கம் 9. 1901 மார்ச்சுமீ 3-உ.)

4. என்மீதிறங்கின இறைவனின் அந்தப் பரிசுத்தமான வஹியின் வாசகமாவது "எதுவரை அந்த ஜனங்கள் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவனையும் ரசூலையும் அங்கிகரிக்கவில்லையென்ற எண்ணத்தை நிவர்த்திக்கவில்லையோ அதுவரை இந்த பிளேக்கென்ற ஆபத்தை ஒருபோதும் நீக்கமாட்டேனென்று ஆண்டவன் நாடினுன்." (தாபிவுல்பலா. 5. ப.)

இப்போது பாருங்கள் இந்த நான்கு ஆதாரங்களில் இறைவன் எனக்கு நபி யென்று பெயரிட்டானென்றும் காதியானில் தனது ரசூலை அனுப்பினுனென்றும், எனக்கு வஹீயறிவித்தானென்றும் தனது ரசூலாகிய (என்னை) ஒப்பாவிட்டால் பிளேக்கென்ற ஆபத்தை நீக்கமாட்டேனென்று வஹீயறிவித்ததாகவும் செப்புகிறூர்.

ஆகையால் ஆழ்ந்த புத்தியோடு விஷயங்களை ஆராயும் நண்பர்கள் முந்தின பிந்தின விஷயங்களை ஆராய்ந்து தீர்ப்புச்செய்யுங்கள். மிர்சாசாஹிபுயார்?

திருக்குர்ஆன் ஷரீபும் காந்த சக்தியும்.

திருக்குர்ஆன் ஷரீபில் ஒருவிதமான காந்த சக்தியுண்டாயிருக்கிறது வாஸ்தவம். அதை ஒருவன் பொருளறிந்து ஓதும்

பக்ஷத்தில் அவன் எப்பேர்ப்பட்ட வன்னெஞ்சனும் துற்கிரியை யுடையவனுயுமிருந்தாலும் அவனது ஹிருதயங்களெல்லாமுருகி நற்செய்கைகளால் பொழிந்து தெய்வதோற்றமாய் விடுகிறுன்.

ஹஸ்ரத் முஹம்மதர் ரசூலுல்லா அவர்கள் காலத்தில் விசேஷமாக அரபியாவிலும் பொதுவாக எல்லாத் தேசங்களிலும் சன்மார்க்க வெளிச்ச மணைந்து துன்மார்க்கமென்ற அஞ்ஞான இருள் மூடிக்கொண்டிருந்ததுமன்றி ஒரே கடவுள் வணக்கம் அறவே யொழிந்து கிரகங்கள், நக்ஷத்திரங்கள், விக்கிரகங்கள் அர்வாஹுகளின் வணக்கங்கள் உண்டாயிருந்தது. இன்னும் மோகம், துராசை, அறிவீனம், சித்தாந்தம், பெருமை, முன் னேர்களின் வழக்கம், மேல் ஜாதி, கீழ் ஜாதி, பால் பார்த்தல், குறி சாஸ்திரம் பார்க்கிறது முதலிய துர் வழக்கங்களுண்டா யிருந்தது அன்றியும் வான லோகத்தின்கண் பிரகாசியா நின்ற நக்ஷத்திரக்கூட்டங்கள் சூரியன் முதலிய கிரகங்களாலும் திருஷ்டிக்கப்படாத அர்வாஹு ஆத்துமாக்களாலும் உலகத்தின் கோர்வை நடந்துவருகிறதாகவும் நம்பியிருந்தனர்.

இன்னும் அரபியாவில் ஏதோ ஒரு அற்ப விஷயத்தினுல் ஒருவருக்கொருவர் சண்டையுண்டாய்விட்டால் கூட்டங் கூட்ட மாகச் சேர்ந்து யுத்தம் புரிந்து அனேக மனுக்கள் அழிந்தும் விரோதம் அழியாததாயும், குற்றமற்ற பெண் சிசுக்களை உயிரோடு தகனஞ்செய்கிறதைப் புண்ணியமென்றெண்ணுகிறது முதலான அநேக அந்தகாரமென்னும் இருள்கடலில் மூழ்கியிருந்தனர்.

பின்னர் திருக் குர்ஆன் ஷரீபினுடைய போதனையென்ற காந்த சக்தியாகிறது வெளியாகவே அவர்களைப் பல வணக்கங் களை விட்டு நீக்கி ஒரே கடவுள் வணக்கமாயும் கடவுள் தாத்து சிபாத்து அபுஆல் யென்னும் விஷயங்களில் கீர்த்தி பெற்ற ஹக்கீம்கள் முதல் நிகர் சொல்லமுடியாத தெளிவான புத்தியும், விசுவாச உறுதியும், வீண் ஊசாட்டங்கள், துர்கொள்கைகள், என்றென்றைக்கும் அவர்களின் இருதயக் கமலங்களிலிருந்து பயண மாய்விட்டதும், சந்தடியற்ற வனங்களிலும், உயர்ந்த சிகரத்தை யுடைய பருவதங்களிலும், ஓயாதடித்துக்கொண்டிருக்கிற அலை களையுடையசமுத்திரங்களிலும், மற்றும் திஷ்டிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களிலும், சர்வலோகங்களையும், படைத்தாளுகிற சிருஷ்டி கர்த்தாவான ரப்பில்ஆலமீனுடைய ஜோதி மகிமை விளங்குகிற தும், உலகத்தின் மாறுதல்களில் அவனது தத்துவமென்ற காந்

களின் மகத்துவம் வெளியாகிறதும், உலகில் நடைபெறக்கூடிய இன்ப துன்பம் கஷ்ட நஷ்டங்களெல்லாம் அவனது வல்லபத்திற்குள்ளடங்கினதென்றும், அழியாமல் நித்தியானந்த சுகம் பெறக்கூடிய ஒருலகத்தின் ஆசையை அவர்களின் மனங்களிலூடுருவச் செய்துவிட்டதும், அந்தப் பேற்றைத் தாரநின்ற ஆசையை அடைந்துகொள்ளுகிறதற்காக இரவும், பகலும் ஓயாது சிந்தையைச் செலுத்தி அந்த ஆண்டவனை வணங்கி கெஞ்சி துஆ இரப்பதும் தங்கள் கவனத்தை ஆண்டவனது தத்துவத்தில் நோட்டமிட்டுச் செலுத்தி அந்தப் பரஞ்சோதியின் ஒளியைத் தெரிசிக்க ஆசிப்பதும் இன்னும் துன்மார்க்கம் சன்மார்க்கமாயும், கன்னெஞ்சு நன்னெஞ்சாயும், கோபம் பொறுமையாயும், வீண் முரட்டுத்தனங்கள் ஒழுங்கான பராக்கிரமமாயும், பொறாமை, வஞ்சகம், சூது வாது முதலிய மற்ற தீய குணங்கள், அற்புதமான நற்குணங்களாய் மனதில் பதிந்து விட்டதும், பகைமையை யொழித்து ஆச்சரியமான ஒற்றுமையைக் கற்பித்துவிட்டதும், பற்பலபிரிவுகளாயும், மேல் தாழென்றிருந்ததை அறத்தவிர்த்து ஆத்தும சக்தி மனிதத்தன்மையை உற்பத்தி செய்து எல்லோரும் சமமாக ஒரே சகோதரராய்ப் பாவிக்கப்பட்டதும் முதலிய இவ்விஷயங்களைக் கவனித்தால் ஒப்பற்ற திருக்குர்ஆன் ஷரீபினுடைய அற்புதமென்னும் காந்த சக்தியென்பது நன்கு புலப்படுகிறது.

மால்கானா விஷயம்.

ஆரியர்கள் இன்னும் இளைக்காமல் அனேக இடங்களில் முயற்சி செய்தாலும் அவர்கள் கோரியபடி பலிக்கவில்லை. காதியானிகளும் தங்கள் கொள்கைகளைச் செலுத்த முயற்சி செய்கிறார்கள். அதையும் கூடியவரை தவிர்க்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் இடங்களிலும் மதரஸாக்களை ஏற்படுத்தி சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் மதக்கல்வியை தகுந்தபடி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் பொருள் மிகத்தேவை.

இஸ்லாமானார்கள்.

10-இந்துக்களும், 2-பெண்களும், ஒரு பிராமணனும், ஒரு ஸ்திரீயும இஸ்லாமானார்கள்.

மஜூசி.

ஒரு ஈரானிய மஜூசி இஸ்லாமதத்தைப்பற்றி இரண்டுமணி நேரம் வாதம் செய்து கடைசி இஸ்லாமாய்விட்டார். அஸீஸுத்தீன் என்னும் நாமமிடப்பட்டது.

ஆரியர்.

பகவான் சிங்கு என்ற ஒரு ஆரியப்பண்டிதர் ஆரிய மதப்பிர சாரத்திற்காக சம்பளம் பெற்றுவந்தார். அவர் இஸ்லாமாகி முஹம்மது அப்துல்லாவென்று நாமமிடப்பட்டார். டாக்டர், ஷியாம் லால் என்ற ஒரு ஆரியர் இஸ்லாமானுர். சுவாமி ஆனந்த பிரகாஷ சாஹிபு பிரமஹன்சு பி. எ (திபானந்த காலேஜ்) லாகூர். எல். எம். எஸ். (மெடிக்கல் காலேஜ லாகூர்.) ஒரு உயர்ந்த பிராமண குலத்தைச் சார்ந்தவர். இவர் மஹாத்மா ஹென்சிராஸ் ஜீ வுடைய ஒரு விசேஷ சிஷர். இன்னும் சுவாமி ராமதீர்த்தம்ஜீ எம். எ. என்பவரின் தூண்டுதலின் பேரில் உலகத்தை வெறுத்து சாதுவாய்விட்டார். அப்பால் சாஸ்வதி வித்தியாலயத்தில் ஹெட் மாஸ்டராயிருந்தார். தற்சமயம் அவரை மஹாத்மா ஹென்சிராஜ்ஜி சுத்திசெய்கிறதற்காக படாயிச் என்ற ஜில்லாவுக்கு அனுப்பினர். அநேகரை சுத்தியும் செய்தார். இஸ்லாமதத்தின் அழகாகிறது அவரின் ஹிருதயத்தை இழுத்துவிட்டது. அவர் ஜும்ஆப்பள்ளியில் மௌலானு அப்துல் பாரீ சாஹிபின் கையின்மீது இஸ்லாமாகிவிட்டார். குலாம் அஹ்மது யென்று நாமமிட்டு இஸ்லாமியக் கல்விச்சாலையில் வேலைபார்த்து வருகிறுர். அவர் தாம் இஸ்லாமான காரணத்தை வெளியிட்டிருக்கிருர். இன்ஷா அல்லாஹ். அடுத்த பத்திரிகையில் தரலாம்.

ஜம்ஹியத்துல் மஷாயிகு.

ஷெய்குமார்களுடையகூட்டம் ஒன்று அஜ்மீர் பான்சா என்ற ஊரில் கூடி ஆத்தும ஞானத்தைப் போதிக்கவும், ஷெய்குமார்களைத் திருத்தவும், ஒற்றுமையை உணர்த்தவும், கூடப்படிருக்கிறதென்று ஆஸாத் சுபுஹானி எழுதுகிருர்.

அமெரிக்காவில் சாராயம்.

அமெரிக்காவில் சாராயம் உற்பத்தி செய்தல், விற்றல், புழங்கல் முதலியவைகளைத் தடுக்கப்பட்டிருந்தது. இப்போது வியாபாரக்கப்பல்கள் சாராயப்புட்டிகளை ஏற்றிக்கொண்டுவந்தால் பறிமுதல் செய்யப்படுமென கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தர்ஜுமா குர்ஆன்.

ஹஸ்ரத் மௌலானு ஷெய்குல் ஹிந்து மஹ்மூதுல் ஹசன் சாஹிபு (ரஹ்) அவர்கள் மால்டாவில் சிறைவாசம் செய்யும்போது செய்த காரியங்களில் விசேஷமானது திருக்குர்ஆன் ஷரீபின் பத

உரையாம். மௌலானா அவர்களின் தர்ஜமா குர்ஆன் மிக மதிப்புப் பெற்றதாயும் சுன்னத்து ஜமாஅத்துகளின் சரியான ஒழுங்கின்படி செய்யப்பட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை. தற்காலம் ஆங்கிலத்தில் தவறான மொழி பெயர்ப்புகளை வாங்கிப் பார்வையிடுவதைவிட இந்த வாங்கி வாசிப்பது மிகப் பலன்தருமென்பது நிச்சயம்.

மதினாப் பத்திரிகையின் ஆசிரியர் மௌலானா அவர்களின் குடும்பத்தார்களிடம் உத்தரவு பெற்று அச்சியற்றிவருகிறார்.

(9, 12, 16, 20, 27-துல்கயிதா மதினா.) (அந்நூர் றமலான்) (அஹ்லஹதீஸ் துல்கயிதா 21)

ஆப்கானிஸ்தான் அமீரும் வட்டியும்.

மாக்ஷிமைதங்கிய அமீர் (அவர்களின் ஆயுளை இறைவன் நீடித்து வைப்பானாக) அவர்கள் வட்டியைப்பற்றிய மார்க்க சட்டத்தைப் பிரசங்கித்து வரும்போது அவ்வூர்வாசிகளை நோக்கிச் சொன்னதாவது:—

எனதன்பார்ந்த நேயர்களே! வட்டியினால் விளையும் நஷ்டங்கள் எவ்வளவு அதிகமென்றால் இறைவனே அதைக் கண்டிப்பான ஹறாமென்றும், பெரும் பாவமென்றும் விபரித்திருக்கிறான். என் அன்பார்ந்த ஜாதியார் இந்த மகா பாவத்தை ஹறாமென்று எண்ணினபோதிலும், அந்த துர்நடப்பை விட்டும் அளவுக்கதிகமாகப் பேணவேண்டுமென்பதாக யானும் கூறுகிறேன். ஏழைகளும், தரித்திரர்களுமாயிருக்கிற உங்களின் சகோதரர்களுக்கு அழகிய கடன் கொடுத்து அதன் பலனை இறைவனிடம் விரும்புங்கள்.

எனது சகோதரர்களே! எனது அற்ப பிரசங்கத்தினால் குர்ஆன்ஷரீபாகிறது எதை நமக்கு விதித்திருக்கிறதோ அது நமது இலாபத்திற்கே என்று மதிப்பிட்டிருக்கலாம். எனினும் துக்கம்; நாம் அதன்மீது கவனத்தைச்செலுத்துகிறதில்லை. நமது மூதாதைகள் முஸ்லிமாயிருந்ததினால் மட்டும்நாமும் முஸ்லிமென்றுசெப்புகிறோம். உண்மையில்நமதுமூதாதைகளும் நாமும்முஸ்லிமாயிருக்கிறதைப்பற்றி இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டியது அவசியமே. எனினும் இஸ்லாமென்பது என்ன? அதன் விதிகளென்ன? என்ற இவ்விஷயங்களையும் கவனிக்கவேண்டியது அவசியமே.

எனது சகோதரர்களே! இஸ்லாமார்க்கத்தில் ஒரு குறையும் கிடையாது. குறையிருந்தால் நமக்குள்ளே இருக்கிறது. குர்ஆனாகிறது முஸ்லிம்கள் மீது அன்னிய மதஸ்தர்களின் தலைமைத்தனத்தை அவசியப்படுத்தவில்லையென்ற உண்மையை உணர்ந்

திருப்போமானால் தற்சமயம் நாம் சுயேச்சையாக இருப்போம். யாதொரு அன்னிய மதஸ்தர்களின் அடிமைத்தனத்தை அங்கீகரித்து அநீதத்திற்கு நம்மைக் குறிபாக்கமாட்டோம். தற்சமயம் நம்மீது பார்த்துக்கொண்டிருக்கும் கஷ்டங்களெல்லாம் நமது அஜாக்கிறதை துர்நடப்புகளின் பலனாயிருக்கிறது.

சகோதரர்காள்; நாம் குர்ஆனின் எழுத்தை மட்டும் பாடம் பண்ணிக்கொண்டோமேயன்றி அதின் அர்த்தத்தின் மீது கவனத்தைச் செலுத்தவில்லை. நாம் குர்ஆனை மையித்துகளின்பேரில் பாத்திஹா ஓதுகிறதற்கு மட்டும் காணிக்கை வைத்து விடுவோமானால், நிச்சயமாய் நம்புங்கள், நாம் இழிவென்ற கிடங்கை விட்டும் வெளியேறப் போகிறதில்லை. இறைவன் நம்மை சிறப்புள்ள ஷரீயத்தின்பேரில் தரிபடுத்தி வைப்பானாக. (மதினா 5. திகாயிதா 1341.) சுருக்கமாயெழுதப்பட்டது.

மஜ்லிசுல் உலமா காரியதரிசி, ஜனாப் மௌலானா மௌல்வி ஷேகு இபுறுஹீம் சாஹிபு அவர்கள் எழுதுவதாவது.

தென்காசி ஹிதாயத்துல் இஃவான் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட இஸ்லாம் மத விளக்கம் ஷவ்வால்மீ சஞ்சிகை ஒன்று வரப்பெற்றேன் அதில் இக்காலத்தில் முஸ்லிம்கள் செய்யவேண்டிய கடமைகளில் முக்கியமான விஷயங்களும், மதப் பிரசாரம் தௌஹீது முதலிய விஷயங்களும் விளக்கிக்காட்டியிருக்கிறது. பொது விஷயங்களை மறந்து தன்னலமே பெரிதென பார்க்கும் இந்நாளில் சில மதாபிமானிகள் சேர்ந்து இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் இச்சங்கத்திற்கு ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவி செய்து முன்னிலைக்குக் கொண்டுவரும்படி வேண்டுகிறேன்.

சி. கா. செய்கு இப்றுஹீம்,
திருச்சி மஜ்லிசுல் உலமா, காரியதரிசி.

வழிகாட்டும் குருக்கள்.

தற்சமயம் மார்க்கமே இன்னதென்று தெரியாத சில குருங்களுண்டாகி தொழுகை வேண்டாம். நோன்பு வேண்டாம். தொழுகையின் நிலையாகிறது மரமாயிருக்கும். ருக்கூஉ செய்கிறது மாடு. சஜதா செய்கிறது பாறையாகும். மரம், மாடு, பாறை ஆகிறதைத் தவிர இதில் யாதொரு பிரயோஜனமில்லை. ஆதலால் தன்னை அறியவேண்டுமென்றும், அதை நாங்களே அறிந்தவர்களென்றும் சாதாரண மனிதர்களை ஏமாற்றி வழிகெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வழிதவறி நடக்கும் இந்த மாயக் குருக்களுடைய எண்ணந் தெரியாமல் சாதாரண ஜனங்கள் ஏமாறிப்போகிறார்கள் என்ன அநியாயம்; முஸ்லிம்களுக்கும், காபிர்களுக்கும் வித்தியாசம் தொழுகையே என்று நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அருளியிருக்க இம்மோசக் குருக்கள் இவ்வளவு சிறப்புற்ற தொழுகையிற் யாதொரு பிரயோஜனமுமில்லை யென்றால் இவர்கள் நாயகவமர்களுக்கு எத்தன்மை யான பகைவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

அஸ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத்தில் சில கூட்டத்தார் தொழ மாட்டோம் ஸக்காத்துக் கொடுக்கமாட்டோமென்று சொன்னதினாலன்றோ ஹஸ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அக்கூட்டத்தாரோடு சண்டைசெய்யும்படி நேரிட்டது.

இன்னும் தொழாதவர்களை காபிரென்றும் அவர்களை வெட்ட வேண்டுமென்றும் ஹஸ்ரத் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜெயிலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். வணக்கங்களில் இவ்வளவு கண்டிப்பாகிய தொழுகையில் யாதொருபிரயோஜனமில்லையென்று கொஞ்சமேனும் பயமில்லாமல் பகிரங்கமாய்ச் சொல்லுகிறவர்களை பெரியோர்கள் என்ன சொல்லுகிறார்களென்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு ஸ்திரீகளுக்குள் கல்வியறிவு என்பது சற்றேனு மில்லையெனத் தெரிந்தவுடன் சில ஸ்திரீகளும் வியாபாரம (முரீது) செய்ய ஆரம்பித்து விட்டனர்.

ஆகவே தற்காலம் நமக்கு வழி காட்டும் குருக்களில் பலர் ம[illegible]கந் தெரியாதவர்களும் முறை தவறி நடப்பவர்களுமாயிருப் [illegible] எனது அருமையான சகோதரிகளே, இவர்களின் வியாபா[illegible]ல் சிக்கிக்கொள்ளாமல் மார்க்கவழியைப்பின்பற்றுவீர்களாக.

கா. ரஹீமா, மரைக்காயர் பள்ளிவாசல் தெரு, தென்காசி.

தஸவ்வபு.

ஹஸ்ரத் உமர் ரலியல்லாஹு அன்கு அவர்கள் சொல்லு[illegible]வது ஒரு நாள் நாங்கள் நாயகமவர்கள் சமுகத்தில் ஆஜரா[illegible]தோம் திடீரென்று ஒருவர் பிரயாணியுடைய கோலத்தில் [illegible]ப வெள்ளைப் பிடவை பணிந்தவராகவந்தார். அவர் ஈமான் [illegible]ாமைப்பற்றி சுவால் செய்துவிட்டு கேட்டதாவது. நாயகமே [illegible]சானென்பது என்ன? அதற்கு நாயகமவர்கள் இஹ்சானுகி[illegible]றைவனை வணங்கும்போது நீ அவனைப் பார்த்துக்கொண் [illegible]துபோல் வணங்கவேண்டும். இன்னும் நீ அவனைப்பாரா[illegible]விட்டால் அப்போதும் அவன் உன்னைப் பார்க்கிறதுபோல (இபாதத்துச் செய்யும்போது) முயர்ச்சி செய்யவேண்டும் என்று திரு[illegible]ளமானார்கள். (மிஷ்காத் கிதாபுல் ஈமான்.)

இந்த ஹதீதின் கருத்தாகிறது [illegible] எந்த வணக்கஞ்செய்

தாலும் சுத்தமான நல்லெண்ணத்துடன் அவனை நாம் பார்க்காவிட்டாலும் நம்மை அவன் பார்த்துக்கொண்டிருக்கிறானென்று அஞ்சி வணங்கவேண்டும். இதுதான் தரீக்கத்து அல்லது தஸவ்வுபு என்று சொல்லப்படும்.

ஹலரத் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜெயிலானி (ரஹ்) அவர்களின் உத்தரவு.

குர்ஆன் ஷரீபையும் நாயகமவர்களின் நடப்பையும் நமக் இமாமாக்குங்கள். அதன்பேரில் நன்கு நோட்டமிட்டுக்கொ அதன்படியே நடந்துகொள்ளுங்கள். இன்னும் வெவ்வே சொற்கள் வீணான விருப்பங்களால் ஏமாறிப்போகாதீர்கள். டவன் உத்தரவுசெய்கிறான் எதை உங்களுக்கு ரசூல் ம பாரோ அதை வாங்கிக்கொள்ளுங்கள். எதை விட்டும் வி வாரோ விலகிக்கொள்ளுங்கள். இன்னும் அல்லாவுக்குப் ப கொண்டிருங்கள். (என்பதே) எதை அல்லாவுடைய ரசூல் ஹிஸ்ஸலாம் கொண்டுவந்தார்களோ அதன்படி நடக்கிறதைவி விடாதீர்கள். இன்னும் தன் சுயமாக பிதுஅத்துகளை உ பண்ணாதீர்கள். (புத்தூஹுல் கைப் மக்காலா. 36.)

இப்போது பாருங்கள் ஷைகு அவர்கள் இதைத்தான் த கத்து அதாவது நேர்பாதை அல்லது ஷரீஅத் யென்று சொ கிறார்கள். ஸ்திரீகளில் சிலர் இவைகளைக் கவனியாது க வின் உட்பொருளறியவேண்டும். ஷரீஅத்து வெளியும் த கத்து அந்தரங்கமுமாயிருக்கும். ஷரீஅத்துக்கும், தரீக்கத் கும் யாதும் சம்பந்தமில்லை. தரீக்கத்து இருந்தால் ஷரீஅத் வேண்டியதில்லையென்றும் சிலர் ஷரீஅத்து தொலி, தரீக்க மூளை யென்றும், சிலர் என்னவிதமாய்த் தொழுதாலும் உள் யம் அறியவில்லையானால் பிரயோஜனங் கொடுக்காதென்றும் வருகிறார்கள்.

இவ்வாறு கூறுவோர்களைப்பார்த்து நீங்கள் சொல்லுகிற விஷயங்களுக்கு ஆதாரம் காட்டலாமா? வென்றால் மஸ்த சாஹிபு பாடல், ஞானமணிமாலை முதலிய பாடல்களில் மனப் மிட்ட சில பாடல்களை உடனே படித்துவிடுகிறார்கள். ஆயி இதன் கருத்தென்ன? தங்களுக்கோ எழுதப்படிக்கத் தெரிய என்று வினவினால் நீங்கள் இப்படித்தான் சொல்லுவீர்களெ கோபித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். எனது அருமை ச தரிகளே! தற்கால ஞானமெல்லாம் படிக்க எழுதத் தெரிய ஞானமே யன்றி வேறல்ல வென்பதை உணர்வீர்களாக.

ஜனாப், மீ. ஷாஹுல் ஹமீது ராவுத்தா அவர்கள் ம
வா. மு பாத்திமா, நடுத்தெரு, தென்காசி.

ஹிதாயத்துல் இகுவான் சங்கம்,
மரைக்காயர் பள்ளிவாசல்தெரு, தென்காசி.